ஜூன் ....
.... 2019

விண்மீன் .காம்

# இரண்டாவது வார நடப்பு நிகழ்வுகள்

09 ஜூன் – 14 ஜூன்

www.winmeen.com

# நடப்பு நிகழ்வுகள்

**1.** 2019 – 20ஆம் நிதியாண்டுக்கான RBIஇன் 2 மாதத்திற்கு ஒருமுறை வெளியிடப்படும் இரண்டாவது நிதிக்கொள்கை மீளாய்வில், தற்போதைய ரெப்போ விகிதம் என்ன?

A) 5.25%

B) 5.50%

C) 5.75% ☑

D) 5.0%




✓ ஜூன்.6 அன்று இந்திய ரிசர்வ் வங்கியின் 6 உறுப்பினர்கள்கொண்ட நிதிக்கொள்கைக் குழுவானது, இருமாதத்திற்கு ஒருமுறை வெளியிடப்படும் 2019 – 20ஆம் நிதியாண்டுக்கான 2ஆவது நிதிக்கொள்கை அறிக்கையில் ரெப்போ விகிதத்தின் 25 அடிப்படை புள்ளிகளைக் குறைத்தது. இதன் காரணமாக, தற்போதைய ரெப்போ விகிதம் 6.0% இலிருந்து 5.75% ஆக குறைந்துள்ளது. குறுகிய – கால பணப் புழக்க இடர்களிலிருந்து (Liquidity Mismatches) வங்கிகள் மீண்டுவருவதற்காக, அவ்வங்கிகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கி வழங்கும் பணப்புழக்கத்திற்கான வட்டி விகிதமே ரெப்போ வட்டி விகிதமாகும்.

✓ ரெப்போ வட்டி விகிதக் குறைப்பானது, வாடிக்கையாளர்களின் கடன்கள் மீதான வட்டி விகிதங்களை குறைக்கும். மேலும் வீட்டுக்கடன்கள், மகிழுந்து கடன்கள் & தனிப்பட்ட கடன்களின் சமப்படுத்தப்பட்ட மாதத் தவணைகளையும் (EMI) குறைக்கும். இதன் விளைவாக, தலைகீழ் ரெப்போ விகிதம் 5.50% எனவும், Marginal Standing Facility (MSF) விகிதம் & வங்கி விகிதம் 6.0% எனவும் சரிசெய்யப்பட்டுள்ளது. இதுதவிர, நிதிக்கொள்கையின் நிலைப்பாட்டை நடுநிலையிலிருந்து இணக்கமானதாக (Accomodativ -e) மாற்றுவதற்கு ரிசர்வ் வங்கி ஒருமனதாக முடிவெடுத்தது. நிதிக்கொள்கை குழுமத்தின் அடுத்த கூட்டம் ஆகஸ்ட் 5 முதல் 7 வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**2.** ஆர்டிக் இரயில் சேவையை அண்மையில் தொடங்கிய நாடு எது?

A) இரஷ்யா ☑

B) ஜெர்மனி

C) பிரான்சு

D) ஐக்கிய அமெரிக்கா



✓ ஜூன்.5 அன்று புனித பீட்டர்ஸ்பர்க் இரயில் நிலையத்திலிருந்து நார்வேவுக்கு, இரஷ்யாவின் ஆர்டிக் பகுதி வழியாக 91 பயணிகளுடன் முதல் சுற்றுலா இரயில் சேவை தொடங்கியது. ஐக்கிய அமெரிக்கா, ஜெர்மனி, நார்வே மற்றும் இரஷ்யா உட்பட ஏழு நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தனர்.

✓ Zarengold (ஜெர்மானிய மொழியில் சாரின் தங்கம் – The Tsar's Gold) என்று பெயரிடப்பட்டுள்ள இந்த இரயில், 2 முழுமையான உணவகங்கள் கொண்ட பெட்டியுடன் புனித பீட்டர்ஸ்பர்க் நிலையத்தில்

இருந்து பெட்ரோசாவ்டோஸ்க் வழியாக பயணித்தது. அமைப்பாளர்களின் கருத்துப்படி, முழு பயணம் முடிவடைய 11 நாட்கள் எடுக்கும்.

**3.** அண்மைச் செய்திகளில் இடம்பெற்றுள்ள சூக்கோ பள்ளத்தாக்கு, பின்வரும் இந்தியாவின் எந்த வடகிழக்கு மாநிலத்தில் அமைந்துள்ளது?



A) அசாம்

B) மிசோரம்

C) நாகாலாந்து ☑

D) அருணாசலப்பிரதேசம்

✓ நாகாலாந்தில் உள்ள இயற்கை எழில்மிகுந்த சூக்கோ பள்ளத்தாக்கு (Dzukou Valley), நடப்பாண்டின் உலக சுற்றுச்சூழல் தினத்தன்று, நெகிழியில்லா மண்டலம் (Plastic Free Zone) என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. இதனை, இளையோர் வளங்கள் மற்றும் விளையாட்டுக்கள் ஆலோசகரான சலே நெய்கா (Zale Neikha), அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

✓ கண்ணுக்கினிய இப்பள்ளத்தாக்கை 'நெகிழியில்லா மண்டலம்' என அறிவித்ததன் பின்னணியில், தெற்கத்திய அங்காமி இளையோர் அமைப்பின் முக்கியப்பங்கு உள்ளது. கடல் மட்டத்திலிருந்து 2452 மீ., உயரத்தில் சூக்கோ பள்ளத்தாக்கு அமைந்துள்ளது. ஒவ்வொரு பருவத்திலும் பூக்கும் பல்வேறு வகை மலர்களுக்காக இப்பள்ளத்தாக்கு புகழ்பெற்றது. அரிய வகை சூக்கோ லில்லி மலர்கள், இந்தப் பள்ளத்தாக்கில் மட்டுமே காணப்படுகின்றன.

**4.** இந்தியாவிற்காக அதிகபட்ச போட்டிகளில் விளையாடியுள்ள கால்பந்து வீரர் யார்?



A) ஜேஜே லால்பேக்லுவா

B) சுனில் சேத்ரி ☑

C) சந்தேஷ் ஜிங்கன்

D) இராபின் சிங்

✓ பாய்சூங் பூட்டியாவின் 107 சர்வதேச போட்டிகளை விஞ்சியதன் மூலம் சுனில் சேத்ரி இந்தியாவிற்காக மிக அதிக போட்டிகளில் விளையாடியுள்ள கால்பந்தாட்ட வீரராக மாறியுள்ளார். தாய்லாந்தில் உள்ள புரிராமில் நடந்த 47ஆவது கிங்ஸ் கோப்பை கால்பந்து போட்டியின் 31ஆவது நிமிடத்தில், சுனில் சேத்ரி தனது 69ஆவது கோலை அடித்தார். இருப்பினும், இந்தப் போட்டியில் 1 – 3 என்ற கோல் கணக்கில் கியூராகாவ் அணியிடம் இந்தியா வீழ்ந்தது.

**5.** எந்த சமூக வலைத்தளம், இந்தியாவில் 'Confetti – காகிதத் துண்டுகள்' என்ற அதன் முதல் ஊடாடு விளையாட்டு நிகழ்ச்சியை (Interactive Game Show) அறிமுகப்படுத்தியுள்ளது?




A) இன்ஸ்டாகிராம்

B) பின்ட்ரஸ்ட்

C) டுவிட்டர்

D) பேஸ்புக் ☑

✓ பேஸ்புக் நிறுவனம், 'Confetti' என்று தலைப்பிடப்பட்ட அதன் முதல் ஊடாடு விளையாட்டு நிகழ்ச்சியை அறிமுகப்படுத்தியுள்ளது. காணொளிக்கென அர்ப்பணிக்கப்பட்ட 'பேஸ்புக் வாட்ச்' என்னும் அதன் தளத்தில், ஜூன்.12 அன்று இந்நிகழ்ச்சி தொடங்கவுள்ளது. புதன்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை இந்நிகழ்ச்சி ஒளிபரப்பப்படும். பங்கேற்பாளர்களிடத்து பாப் கலாசாரத் திருவிழா கேள்விகள் கேட்கப்பட்டு, ஒவ்வொரு நாளும் மூன்று லட்சம் வரை பரிசுகள் வெல்ல வாய்ப்பு அளிக்கப்படும். கடந்த 2018ஆம் ஆண்டில் YouTube தளத்திற்கு போட்டியாக, பேஸ்புக் நிறுவனம் தனது காணொளி சேவை தளமான பேஸ்புக் வாட்சை (Facebook Watch) உலகளவில் தொடங்கியது.

**6.** இந்தியாவில் விமானப் போக்குவரத்து மேலாண்மையை நவீனமயமாக்குவதற்காக, எந்த நிறுவனத்துடனான ஒப்பந்தத்தில் அண்மையில் இந்திய வானூர்தி நிலையங்கள் ஆணையம் (AAI) கையெழுத்திட்டது?

A) ஏர்பஸ்

B) போயிங் (Boeing) ☑

C) எம்பிரேர்

D) டஸ்ஸால்ட் ஏவியேஷன்

✓ நாட்டில் விமானப் போக்குவரத்துச் சேவைகளை நவீனமயமாக்குவதற்கான ஒரு விரிவான செயல் திட்டத்தை உருவாக்குவதற்காக, தொழினுட்ப உதவி வழங்கும் ஓர் ஒப்பந்தத்தில், அமெரிக்காவைச் சேர்ந்த விமானத்தயாரிப்பு நிறுவனமான போயிங் நிறுவனமும், இந்திய வானூர்தி நிலையங்கள் ஆணையமும் (AAI) கையெழுத்திட்டுள்ளன. வான் போக்குவரத்துச் சேவைகளானது தொடர்பாடல், வழிகாட்டல் & கண்காணிப்பு மற்றும் வான் போக்குவரத்து நிர்வாகம் ஆகியவற்றை உள்ளடக்கியது.

✓ இந்தப் பத்தாண்டுகால நவீனமயமாக்கல் செயல்திட்ட வரைபடமானது அமெரிக்க வர்த்தகம் மற்றும் வளர்ச்சி முகமையின் மானியத்துடன் மேற்கொள்ளப்படும். சிறந்த முறையில் வான்வெளி திறனை பயன்படுத்துவதற்கும், தொடர்பாடல் (Communication), வழிகாட்டல் (Navigation) & கண்காணிப்பு (Surveillance) மற்றும் வான் போக்குவரத்து நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக பன்னாடு மற்றும் உள்நாடுகளால் பின்பற்றப்பட்டு வரும் சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில், இந்திய தேசிய வான்வெளி அமைப்பின் நவீனமயமாக்கலில் வழிகாட்டியாக பயன்படுத்துவதற்கான செயல்திட்ட வரைபடம் ஒன்றை AAIக்கு உருவாக்கித்தர இந்த ஒப்பந்தம் நோக்கம் கொண்டுள்ளது.

**7.** அமெரிக்கக் கீழவையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள முதல் தெற்காசிய அமெரிக்கப் பெண்மணி யார்?



A) மேதா யோத்

B) கௌசல்யா ஹர்ட்

C) பிரமிளா ஜெயபால் ☑

D) காயத்ரி ஸ்பிவாக்

✓ அமெரிக்காவின் கீழவை அல்லது பிரதிநிதிகள் அவையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள முதல் தெற்காசிய அமெரிக்கப் பெண்மணியாக பிரமிளா ஜெயபால் மாறியுள்ளார். இவர் வாஷிங்டன் DCஐச் சேர்ந்த ஜனநாயகவாதி ஆவார். கீழவையில் 14 பேர், மேலவையில் மூவர் உட்பட மொத்தம் 17 ஆசிய அமெரிக்கர்கள் காங்கிரஸில் பணியாற்றியுள்ளனர்.

**8.** சித்தார்த் ராவத், எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?



A) டேபிள் டென்னிஸ்

B) டென்னிஸ் ☑

C) கால்பந்து

D) பாட்மிண்டன்

✓ $25,000 அமெரிக்க டாலர்கள் மதிப்புடைய ITF ஆண்கள் பியூச்சர்ஸ் டென்னிஸ் போட்டியில் தனது முதல் பட்டத்தை வெல்வதற்காக, ஜப்பானைச் சேர்ந்த வீரர் ரியோ நோகுச்சியை இந்திய டென்னிஸ் வீரர் சித்தார்த் ராவத் வீழ்த்தியுள்ளார். இதன்மூலம், தரவரிசையில் 510ஆவது இடத்திலிருந்த அவர், தற்சமயம் 430ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

**9.** மஞ்சள் கடலிலிருந்து அதன் முதல் விண்வெளி ஏவுகணையை (Sea – based Space Rocket) வெற்றிகரமாக ஏவிய நாடு எது?



A) இந்தோனேஷியா

B) வியட்நாம்

C) ஜப்பான்

D) சீனா ☑

✓ சீனா முதல்முறையாக கடலிலிருந்து விண்வெளி ஏவுகணையை வெற்றிகரமாக ஏவியது. இதன்மூலம், இரஷ்யா மற்றும் அமெரிக்காவுக்குப் பின்னர், மிதக்கும் தளத்திலிருந்து சுற்றுப்பாதைக்கு செயற்கைக் கோளை ஏவும் திறன் படைத்த நாடுகளின் பட்டியலில் மூன்றாவது நாடாக சீனா இணைந்துள்ளது.

- ✓ லாங் மார்ச் 11 ஏவுகணை, ஷான்டோங் மாகாணத்தை ஒட்டிய மஞ்சள் கடல் பரப்பில், ஒரு மிதக்கும் ஏவு தளத்திலிருந்து ஜூன்.5 அன்று ஏவப்படும் என சீன தேசிய விண்வெளி நிர்வாகம் அறிவித்திருந்தது. சீனா இப்போது அதன் உள்நாட்டு மற்றும் இராணுவத் திட்டங்களில் இரஷ்யா மற்றும் ஜப்பானை விடவும் அதிகமாக செலவு செய்கிறது.

- ✓ இந்த ஆண்டின் தொடக்கத்தில், நிலவின் புறப்பகுதியில் ஆராய்ச்சி ஊர்தி ஒன்றை தரையிறக்கிய முதல் நாடாக சீனா மாறியது. நிலவின் பரப்பில் ஆராய்ச்சித் தளம் ஒன்றைக் கட்டுவது, செவ்வாய்க்கு ஆய்வுக்கலம் ஒன்றை அனுப்புவது, புவி சுற்றுப்பாதையில் விண்வெளி நிலையம் ஒன்றை கட்டுவது உள்ளிட்ட திட்டங்களையும் சீனா அறிவித்துள்ளது.

**10.** 2019 G-20 நிதியமைச்சர்கள் சந்திப்பானது, எந்த நகரத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது?

**A)** புகோகா (Fukuoka) ☑

**B)** புது தில்லி

**C)** ஹனோய்

**D)** கோலாலம்பூர்




- ✓ ஜூன் 8 & 9 ஆகிய தேதிகளில் ஜப்பானில் நடந்த G-20 நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் சந்திப்பில், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்துகொண்டார். நிதியமைச்சராக நிர்மலா சீத்தாராமன் சென்ற முதல் வெளிநாட்டு சுற்றுப்பயணம் இதுவாகும். உலகப் பொருளாதாரம், உட்கட்டமைப்பு, சர்வதேச வரிவிதிப்பு ஆகியவை எதிர்கொள்ளும் அபாயங்கள் மற்றும் சவால்கள் மீது இந்தச் சந்திப்பு கவனம் செலுத்தியது.

- ✓ G-20 என்பது இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராஜ்ஜியம், சீனா, இரஷ்யா, சவுதி அரேபியா, பிரேசில், பிரான்சு மற்றும் ஆஸ்திரேலியா உள்ளிட்ட வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளின் குழுவாகும். 1999ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் நடத்தப்படும் G-20 சந்திப்புகள், சர்வதேச நிதியமைப்பில் உள்ள முக்கிய நாடுகளுக்கு, முதன்மை சர்வதேச பொருளாதாரச் சிக்கல்கள் குறித்து விவாதிக்கவும், நிலையான மற்றும் நீடித்த சர்வதேச பொருளாதார வளர்ச்சியை ஒருங்கிணைக்கவும் ஒரு தளத்தை வழங்குகிறது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில், 2 நாள் நடைபெறும் 13ஆவது தேசிய நெல் திருவிழா ஜூன்.8ஆம் தேதியன்று தொடங்கியது.

- ✓ நாடக ஆசிரியர், நடிகர், கதாசிரியர், வசனகர்த்தா என்று பன்முகம் கொண்ட கலைஞர் ‘கிரேசி’ மோகன் (66), ஜூன்.10 அன்று சென்னையில் காலமானார்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** மாலத்தீவின் 'நிஷான் இஸ்ஸுதின்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?

A) சுஷ்மா சுவராஜ்

B) இராம்நாத் கோவிந்த்

C) நரேந்திர மோடி ☑

D) நிர்மலா சீதாராமன்



✓ மாலத்தீவில், அயல்நாட்டவருக்கு வழங்கப்படும் மிகவுயரிய விருதான 'நிஷான் இஸ்ஸுதின் – Nishan Izzuddin' விருது பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. ஜூன்.8 அன்று மாலத் தீவு மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் மோடி சுற்றுப்பயணம் மேற்கொண்டார். 2011க்குப்பின், மாலத்தீவுக்கு, இந்தியப் பிரதமர் ஒருவர் புரியும் முதல் இருதரப்பு வருகையாகும் இது.

✓ மோடி தனது இந்தச் சுற்றுப்பயணத்தின் போது, மாலத்தீவு அதிபர் இப்ராகிம் முகமது சோலியுடன் இரு தரப்பு விவாதத்திலும், துணை அதிபர் பைசல் நசீம் மற்றும் மஜிலியின் அவைத்தலைவர் மற்றும் முன்னாள் அதிபர் முகமது நசீத் ஆகியோருடனான சந்திப்பிலும் பங்கேற்றார். மேலும் 'People's Majilis' என்றழைக்கப்படும் அந்தத் தீவு நாட்டின் சட்டமன்றத்திலும் அவர் உரையாற்றினார். அதிபர் சோலி உடன் இணைந்து, பிரதமர் மோடி, கரையோரக் கண்காணிப்பு அமைப்பு மற்றும் மாலத்தீவின் தேசிய பாதுகாப்புப் படைகளுக்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையத்தையும் திறந்து வைத்தார். இவ்விரு திட்டங்களும் இந்திய மானியத்துடன் உருவாக்கப்பட்டவை.

✓ மாலத்தீவில் ஒரு கிரிக்கெட் மைதானம் அமைப்பது, இந்தியத் தொல்லியல் துறையின் உதவியோடு 'வெள்ளிக்கிழமை மசூதி'யை புனரமைப்பது உள்ளிட்ட மாலத்தீவுக்கான சில புதிய திட்டங்களையும் இந்தியா அறிவித்துள்ளது.

**2.** அண்மையில் எந்த நாட்டில், 'அமைதிக்கான காந்தி சைக்கிள் பேரணி' நடத்தப்பட்டது?

A) ஓமன்

B) சவுதி அரேபியா ☑

C) தென்னாப்பிரிக்கா

D) கென்யா



✓ சவுதி அரேபியாவில் உள்ள இந்திய தூதரகம், மகாத்மா காந்தியின் 150ஆவது பிறந்தநாளை நினைவு கூரும் விதமாக ரியாத்தில் 'அமைதிக்கான காந்தி சைக்கிள் பேரணி'யை நடத்தியது. இச்சைக்கிள் பேரணியானது Diplomatic Quarter Authority உடனும், சவுதி சைக்ளிங் கூட்டமைப்புடனும் இணைந்து நடத்தப்பட்டது. 150க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் இச்சைக்கிள் பேரணியில் பங்கேற்றனர். இந்தச் சைக்கிள் பேரணியை சவுதி அரேபியாவுக்கான இந்திய தூதர் Dr. ஆசப் சையீத், கொடியசைத்து தொடங்கிவைத்தார்

**3.** நடப்பாண்டின் உலகப் பெருங்கடல்கள் தினத்துக்கான கருப்பொருள் என்ன?



A) Gender and Oceans ☑

B) Clean our Ocean!

C) Healthy Oceans, Healthy Planet

D) Our Oceans, Our Future

✓ உலகிலுள்ள பெருங்கடல்களின் மகத்துவத்தை கொண்டாடுவதோடு, அவற்றின் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.8 அன்று உலகப் பெருங்கடல்கள் தினம் (World Oceans Day) கடைப்பிடிக்கப்படுகிறது. புவியின் உயிர்வளித் தேவையில் கிட்டத்தட்ட 70 சதவீதத்தை பெருங்கடல்கள் பூர்த்திசெய்கின்றன. அவை, உலகின் காலநிலை மற்றும் வானிலையை ஒழுங்கு செய்கின்றன. கடல்சார் வாழ்வை ஆதரிக்கின்றன. அவை நமக்கு உணவும், பெரும்பாலான நமது மருந்துகளுக்குத் தேவையான பொருட்களையும் வழங்குகின்றன.

✓ ஆனால் மாசு மற்றும் அதிகப்படியான மீன்பிடித்தல் ஆகிய காரணங்களால் நமது பெருங்கடல்களும் கடல்சார் வாழ்வும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளன. இந்த நாள், இத்தகையச் சவால்களை எதிர் கொள்வதற்கு நோக்கம் கொண்டுள்ளது. நடப்பாண்டில் வரும் இந்த நாளுக்கான கருப்பொருள், “பாலினம் மற்றும் கடல்கள்” என்பதாகும். இது கடல்சார் துறைகளில் பெண்கள் மற்றும் ஆண்களின் பிரதிநிதித்துவ சமத்துவத்தை பிரதிபலிக்கிறது.

**4.** பாலகோட் வான் தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட நூறு SPICE இரக குண்டுகளை கொள்முதல் செய்வதற்காக, எந்த நாட்டுடனான ரூ.300 கோடி மதிப்புடைய ஒப்பந்தத்தில், இந்தியா சமீபத்தில் கையெழுத்திட்டுள்ளது?



A) பிரான்ஸ்

B) இஸ்ரேல் ☑

C) ஐக்கிய அமெரிக்கா

D) ஜப்பான்

✓ ரூ.300 கோடிக்கு, 100க்கும் அதிகமான ‘SPICE’ இரக வெடிகுண்டுகளை இஸ்ரேலிலிருந்து கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தில், இந்திய விமானப் படை கையெழுத்திட்டது. புல்வாமா தாக்குதலில் 44 வீரர்கள் கொல்லப்பட்டதை அடுத்து, பிப்ரவரி 26 அன்று பாகிஸ்தானின் பாலக்கோட்டில் ஜெய்ஷ்-இ-முகமது பயிற்சி முகாம்களின் மீது இந்திய விமானப் படை நடத்திய வான் படை தாக்குதலில் SPICE இரக வெடிகுண்டுகள் பயன்படுத்தப்பட்டன.

✓ இந்த ஒப்பந்தத்தின்படி, அதிநவீன திறன்கொண்ட SPICE இரக வெடிகுண்டுகள் அடுத்த 3 மாதங்களில் இந்திய விமானப்படையிடம் ஒப்படைக்கப்படும். அவசர கால அதிகாரங்களின் அடிப்படையில் இந்த ஒப்பந்தம் போடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக்குண்டுகள் 60 கி.மீ., தூரம் வரையிலான

இலக்கை தாக்கியழிக்கும் வல்லமை உடையவை. இவ்வெடிகுண்டுகளில் உள்ள 'Electro Optical' திறன் விமானத்தில் உள்ள கணினியால் கட்டுப்படுத்தக்கூடியது. இஸ்ரேலின் Rafael Advanced Defence Systems என்ற நிறுவனம் ஆற்றல் வாய்ந்த இவ்வகை வெடிகுண்டுகளை தயாரித்துவருகிறது.

**5.** நடப்பாண்டில், ஐ.நா'வின் நிலநடுக்கோடு பரிசை (Equator Prize) வென்ற இந்திய அரசு சாரா அமைப்பு எது?

A) சேவ் லைப் அறக்கட்டளை

B) அகாங்க்ஷா பொதுத் தொண்டு நிறுவனம்

C) ஸ்வயம் சிக்ஷான் பிரயோக்

D) டெக்கான் டெவலப்மெண்ட் சொசைட்டி ☑



✓ தெலுங்கானாவைச் சேர்ந்த Deccan Development Society (DDS) குழுக்களின் பெண் உறுப்பினர்கள் நடப்பாண்டின் பெருமைமிகு ஐ.நா வளர்ச்சித் திட்டத்தின் நிலநடுக்கோடு பரிசை வென்றுள்ளனர். காலநிலை மாற்றம் மற்றும் நீடித்த வளர்ச்சிக்கு, இயற்கையை அடிப்படையாகக் கொண்ட தீர்வின் சிறந்த எடுத்துக்காட்டாக நின்றதால் அவர்கள் இந்தப் பரிசுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இந்தப் பெண் விவசாயிகள், தங்களது சொந்த விதை வங்கிகளை உருவாக்கியுள்ளனர். மேலும், சங்காரெட்டி மாவட்டத்தின் பெருவாரியான மானாவாரி சிற்றூர்களில் கம்புப்பயிர்களை வளர்த்துள்ளனர்.

✓ வரும் செப்டம்பர் மாதம் நியூயார்க்கில் வழங்கப்படவுள்ள இப்பெருமைமிகு விருதுக்கு தேர்வாகியுள்ள தெலுங்கு மாநிலங்களைச் சேர்ந்த முதல் குழு இந்த DDS பெண் விவசாயிகள் குழுதான். $10,000 அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான இந்தப்பரிசு, காலநிலை மாற்றம் மற்றும் நீடித்த வளர்ச்சிக்கு இயற்கை அடிப்படையிலான தீர்வுகளுக்கு வழங்கப்படுகிறது. இவ்விருது உள்ளூர் மற்றும் உள்நாட்டு சமுதாயத்தின் முயற்சிகளை அங்கீகரிக்கிறது.

**6.** தாய்லாந்தின் புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?

A) தக்ஷின் ஷினவத்ரா

B) பிரயுத் சான் – ஓச்சா (Prayuth Chan – ocha) ☑

C) தனத்தோன் ஜுவாங்ருங்ருவாங்கிட்

D) பிரேம் தின்சுலாநொந்தா



✓ தாய்லாந்து நாடாளுமன்றம் அண்மையில் தனது புதிய பிரதமராக, முன்னாள் இராணுவ அரசாங்கத் தலைவர் பிரயுத் சான் – ஓச்சாவைத் தேர்ந்தெடுத்துள்ளது. ஜூன்.5 அன்று நாடாளுமன்றத்தில் நடந்த 10 ம.நேர கடுமையான விவாதத்தை உள்ளடக்கிய 12 ம.நேர அமர்வுக்குப் பின்னர், அவர் ஜண்டா – எதிர்ப்பு எதிர்கால முற்போக்குக் கட்சியின் தலைவர் தனத்தோன் ஜுவாங்ருங்ருவாங்கிட்டைத் தோற்கடித்தார்.

✓ இதன்மூலம், இராணுவ சார்புடைய 'பலங் பிரசாரத்' தலைமையிலான கூட்டணி அரசுக்கு பிரயுத் இப்போது தலைமைதாங்குவார். பிரயுத்தின் இந்நியமனம், தாய்லாந்து அரசர் மகா வஜ்ரலாங்கானின் ஒப்புதலுக்குப் பின்னர் அதிகாரப்பூர்வமாகும். தாய்லாந்து ஓர் அரசியலமைப்புடன் கூடிய முடியாட்சி நடைபெறும் நாடாகும்.

**7.** அரசியல் மேதகைப் பண்புக்காக ஜார்ஜ் H.W. புஷ் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ள அமெரிக்க முன்னாள் அதிபர் யார்?



A) ஜார்ஜ் டபிள்யூ புஷ்

B) ஜிம்மி கார்ட்டர் (Jimmy Carter) ☑

C) பராக் ஒபாமா

D) பில் கிளிண்டன்

✓ அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஜிம்மி கார்ட்டருக்கு ஐக்கிய அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையேயான உறவுகளுக்கு அவர் செய்த பங்களிப்புகளுக்காக, அரசியல் மேதகைப் பண்புக்கான (Statesmanship) ஜார்ஜ் H.W. புஷ் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. அட்லாண்டாவிலுள்ள கார்ட்டர் மையத்தில் ஜூன்.12 அன்று ஒரு விருது வழங்கும் விழா நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

✓ ஐக்கிய அமெரிக்காவுக்கும், சீன மக்கள் குடியரசுக்கும் இடையே ஆக்கபூர்வமான மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் உறவுகளை வளர்ப்பதற்கு, உள்ளார்ந்த பங்களிப்புகளைச் செய்தவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுவதாக ஜார்ஜ் H.W. புஷ் அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

**8.** 'சர்வதேச யோகா தின விருது'களை நிறுவியுள்ள மத்திய அமைச்சகம் எது?



A) திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகம்

B) தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் ☑

C) சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்றம் அமைச்சகம்

D) மனித வள மேம்பாட்டமைச்சகம்

✓ யோகக்கலையின் சிறப்பு குறித்து மக்களிடையே கருத்தைப் பரவச்செய்யும் அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களுக்கு 'சர்வதேச யோகா தின ஊடக விருதுகள்' இந்த ஆண்டு முதல் வழங்கப்படும் என மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது. யோகாவைப் பிரபலப்படுத்துவதில் ஊடகங்களின் பங்களிப்பு குறித்து ஆறு நடுவர்கள் மதிப்பீடு செய்வார்கள்.

✓ 3 பிரிவுகளில் 33 விருதுகள் வழங்கப்படவுள்ளன. சிறப்புப் பதக்கம் / பட்டயம் / கோப்பை / பாராட்டுப் பத்திரம் ஆகியவற்றைக் கொண்டதாக இந்த விருது இருக்கும். ஜூன்.10 – 25ஆம் தேதி வரையிலான காலம், இதற்கான தகுதிக் காலமாக எடுத்துக்கொள்ளப்படும்.

**9.** முதலாவது உலக உணவுப் பாதுகாப்பு தினம் (World Food Safety Day), எந்தத் தேதியில் அதிகாரப்பூர்வமாக அனுசரிக்கப்பட்டது?

A) ஜூன் 7 ☑

B) ஜூன் 8

C) ஜூன் 9

D) ஜூன் 6




✓ நாம் உண்ணும் உணவு பாதுகாப்பானது என்பதை உறுதிப்படுத்தும் முயற்சிகளை வலுப்படுத்துவதற்காக, ஜூன்.7 அன்று முதலாவது உலக உணவுப் பாதுகாப்பு நாள் அதிகாரபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது. நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள், "Food Safety, everyone's business – உணவுப் பாதுகாப்பு, ஒவ்வொருவரின் வேலை" என்பதாகும். என்னென்ன வழிகளிலெல்லாம் உணவு பாதுகாப்பானது நலந்தரும் உணவுகளை ஊக்குவிக்க இயலும் என்பது பற்றி விவாதிக்கவும், உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை நியூயார்க்கில் உள்ள ஐ.நா அவை மேற்கொண்டு எவ்வாறு ஆதரிக்க முடியும் என்பது குறித்து விவாதிக்கவும் இந்நாள் ஒரு நல்வாய்ப்பை வழங்குகிறது.

✓ 2018 டிசம்பரில், ஐ.நா. பொது அவை இந்தத் தினத்தை ஏற்றுக்கொண்டது. உலகம் முழுவதும் உணவு பாதுகாப்பு குறித்த முயற்சிகளை ஊக்கப்படுத்துவதற்காக ஐ.நா தனது உணவு மற்றும் வேளாண்மை அமைப்பையும், உலக சுகாதார அமைப்பையும் பணித்துள்ளது.

**10.** பன்னாட்டு மன்னிப்பு அவையின் நடப்பாண்டுக்கான மனச்சான்றின் தூதர் விருதை வென்றுள்ள கிரேடா துன்பெர்க் (Greta Thunberg), எந்த நாட்டைச் சேர்ந்தவராவார்?

A) ஜெர்மனி

B) சுவீடன் ☑

C) பிரான்ஸ்

D) போர்ச்சுகல்



✓ சுவீடன் நாட்டைச் சேர்ந்த 16 வயதேயான காலநிலை போராளி கிரேடா துன்பெர்கும், "Fridays for Future" என்ற அவரது உலகளாவிய இயக்கமும், பன்னாட்டு மன்னிப்பு அவையின் நடப்பாண்டுக்கான மனச்சான்றின் தூதர் விருதை (Amnesty International's Ambassador of Conscience Award for 2019) வென்றுள்ளனர். புவி வெப்பமயமாதலால் ஏற்படும் ஆபத்து குறித்த உலக மக்களின் கருத்துக்களை ஒன்றுதிரட்டியதற்காக அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

✓ 2018 ஆகஸ்டில் "Fridays for Future" என்ற இயக்கம் கிரேடா துன்பெர்கால் தொடங்கப்பட்டது. காலநிலை மாற்றத்தை சமாளிப்பதற்கு, சுவீட நாட்டு நாடாளுமன்றம் தீவிர நடவடிக்கையை எடுக்கும் வரையில், ஒவ்வொரு வெள்ளியன்றும் பள்ளிக்குச் செல்லாமல், சுவீட நாடாளுமன்றத்திற்கு வெளியே எதிர்ப்பு தெரிவிப்பதென கிரேடா முடிவெடுத்தார்.

- காலநிலை நெருக்கடி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் அவரது முயற்சிகள், விரைவாக உலகளவில் சென்றன. அவரது போராட்டம், மில்லியன் கணக்கான மாணவர்களை, காலநிலை மாற்றம் குறித்து விரைவான நடவடிக்கை எடுக்கக்கோரி போராட்டத்தில் சேர பள்ளியைத் தவிர்க்க தூண்டியது. இந்த இயக்கம் இப்போது, சுவீடனுக்கு அப்பால் பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவியுள்ளது.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- மின்னணு முறையில் முத்திரையிடப்பட்ட சரக்குப் பெட்டகங்களை துறைமுகத்துக்குள் நேரடியாக அனுமதிக்கும் வகையில், தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகத்துக்கும், மத்திய சேமிப்புக் கிடங்கு கழகத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

- இந்தியாவில் முதல்முறையாக சிங்கப்பூரைப் போன்று சென்னையில் எதிர் சவ்வூடு பரவுதல் முறை மூலம் கழிவுநீர் அதிகளவு சுத்திகரிக்கப்படவுள்ளது. இதற்காக கோயம்பேடு, கொடுங்கையூரில் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.** பெண்களின் பாதுகாப்பிற்காக 'பிங்க் சாரதி' வாகனங்களை சமீபத்தில் அறிமுகப்படுத்திய மாநில அரசு எது?

A) கர்நாடகா ☑

B) கேரளா

C) உத்தரப்பிரதேசம்

D) ஜார்க்கண்ட்



✓ நகரப் பேருந்துகளில் பயணிக்கும் பெண் பயணிகள் அளிக்கும் புகார்களை விசாரிப்பதற்காக, கர்நாடக மாநில முதலமைச்சர் H D குமாரசாமி, அண்மையில் 'Pink Sarathi' வாகனங்களை அறிமுகம் செய்துள்ளார். 'நிர்பயா' திட்டத்தின்கீழ், பெங்களூரு பெருநகர போக்குவரத்துக் கழகத்தால், இந்த வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. 'பிங்க் சாரதி' வாகனங்களை அறிமுகப்படுத்துவது உட்பட பெண் பயணிகளின் பாதுகாப்புக்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்காக, மத்திய அரசிடமிருந்து இந்தத் திட்டத்தின்கீழ், ரூ.56.07 கோடி ரூபாயை அக்கழகம் பெற்றுள்ளது

**2.** சூரிய ஆற்றலில் இயங்கும் சமையலறையை மட்டுமே கொண்டுள்ள இந்தியாவின் முதல் கிராமமாக மாறியுள்ள பாஞ்சா கிராமம், ம.பி மாநிலத்தின் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

A) ஜபல்பூர்

B) போபால்

C) சிந்தவாரா

D) பேதுல் ☑




✓ மத்தியப்பிரதேச மாநிலத்தின் பேதுல் மாவட்டத்தில் உள்ள பாஞ்சா கிராமம், சூரிய சமையலறையை மட்டுமே கொண்டுள்ள இந்தியாவின் முதல் கிராமமாக மாறியுள்ளது. இந்தக் கிராமத்தில் உள்ள 75 வீட்டினரும், தங்களது சமையல் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதற்காக சூரிய அடுப்பையே சார்ந்துள்ளனர். விறகு அடுப்புகளையோ அல்லது LPG எரிவாயு உருளை அடுப்புகளையோ அவர்கள் பயன்படுத்துவதில்லை.

✓ மும்பை ஐஐடியைச்சேர்ந்த குழுவினர், ஒரு தனித்துவமான சூரிய ஆற்றலில் இயங்கும் அடுப்பு ஒன்றை வடிவமைத்துள்ளனர். இதன் காரணமாக, அக்கிராமத்தின் மக்கள் இப்போது விறகு தேவைக்காக மரங்களை வெட்டுவதை நிறுத்தியுள்ளனர். அனைத்து 75 வீடுகளிலும் சூரிய ஆற்றல் தகடுகள், மின் கலங்கள் மற்றும் அடுப்புகளை நிறுவும் திட்டமானது 2017ஆம் ஆண்டு செப்டம்பரில் தொடங்கப்பட்டு, 2018ஆம் ஆண்டு டிசம்பரில் நிறைவடைந்தது.

**3.** தேசிய கட்சி தகுதியைப் பெற்றுள்ள வடகிழக்குப்பகுதியைச்சேர்ந்த முதல் அரசியல் கட்சி எது?

A) தேசிய மக்கள் கட்சி ☑



B) அகில இந்திய ஐக்கிய ஜனநாயக முன்னணி

C) மலை மாநில மக்கள் ஜனநாயகக் கட்சி

D) திரிபுராவின் பழங்குடி மக்கள் முன்னணி

- ✓ மேகாலயாவில் பாரதீய ஜனதா கட்சியுடன் கூட்டணியில் இருக்கும் ஆளும் தேசிய மக்கள் கட்சிக்கு (National People's Party) இந்திய தேர்தல் ஆணையம் தேசிய கட்சி தகுதியை வழங்கியுள்ளது. அந்தக் கட்சியின் வேண்டுகோளின்படி, அதற்கு 'நூல் – Book' சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், வடகிழக்குப் பகுதியிலிருந்து தேசியக்கட்சி என்னும் தகுதியைப்பெறும் முதல் அரசியல் கட்சியாக தேசிய மக்கள் கட்சி மாறியுள்ளது.

- ✓ இந்தக்கட்சி மேகாலயா, மணிப்பூர், அருணாச்சலப்பிரதேசம் மற்றும் நாகாலந்து முதலிய வடகிழக்கு மண்டலத்தின் நான்கு மாநிலங்களில் அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக உள்ளது. 1968ஆம் ஆண்டின் தேர்தல் சின்னங்கள் (முன்பதிவு மற்றும் ஒதுக்கீடு) ஆணையின்படி, மக்களவை அல்லது சட்டமன்றத் தேர்தல்களில் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் ஒரு கட்சியின் வேட்பாளர் குறைந்தபட்சம் 6% வாக்குகளைப் பெற்றிருந்தால், அக்கட்சி தேசிய கட்சியாக அங்கீகரிக்கப்படும்.

- ✓ கூடுதலாக, குறைந்தபட்சம் நான்கு மக்களவை உறுப்பினர்களையாவது அக்கட்சி கொண்டிருத்தல் வேண்டும். மொத்த மக்களவைத் தொகுதியில் குறைந்தபட்சம் 2 சதவீதத்தை அக்கட்சி பெற்றிருக்க வேண்டும். அந்தக் கட்சியின் வேட்பாளர்கள், குறைந்தபட்சம் 3 மாநிலங்களிலிருந்து மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். மூன்றாவதாக குறைந்தபட்சம் 4 மாநிலங்களிலாவது அந்தக் கட்சி, மாநிலக்கட்சியாக அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**4.** 2019 பிரெஞ்சு ஓப்பன் டென்னிஸ் போட்டியில், ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்றவர் யார்?

A) டொமினிக் தியெம்

B) ரபேல் நடால் ☑



C) நோவக் ஜோகோவிச்

D) ரோஜர் பெடரர்

- ✓ டென்னிஸில், உலகின் இரண்டாம் நிலை வீரரான ரபேல் நடால் 12ஆவது முறையாக பிரெஞ்சு ஓப்பன் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்றுள்ளார். ஜூன்.9 அன்று பாரிசில் நடந்த இறுதிப்போட்டியில், ஆஸ்திரேலிய வீரர் டொமினிக் தியெமை 6-3, 5-7, 6-1, 6-1 என்ற செட்கணக்கில் வீழ்த்தி, ரோலண்ட் கேரோஸில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக அவர் வென்றுள்ளார்.

- ✓ இதன்மூலம், ஒரே மாதிரியான கிராண்ட்ஸ்லாம் போட்டியில், 12 ஒற்றையர் பட்டங்களை வென்ற முதல் வீரர் என்ற பெருமையை நடால் பெற்றுள்ளார். தற்சமயம் 18 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை

அவர் வென்றுள்ளார். இந்த வெற்றி, ரபேல் நடாலுக்கு 82ஆவது தொழில்முறை பட்டத்தையும் 950ஆவது போட்டியின் வெற்றியையும் அளித்துள்ளது.

**5.** பின்வருவனவற்றுள் அண்மையில் காலமான கிரிஷ் கர்னாட் எழுதிய நாடகங்கள் எது / எவை?

A) துக்ளக்



B) யயாதி

C) ராக்ஷஸ தங்கடி

D) மேற்கண்ட அனைத்தும் ☑

✓ பிரபல எழுத்தாளரும், நாடக ஆசிரியரும், நடிகருமான கிரிஷ் கர்னாட் (81), ஜூன்.10 அன்று பெங்களூரு -வில் காலமானார். மே 1938இல் பிறந்த இவர், 60 & 70களில் மிகப்பிரபலமான நாடக ஆளுமைகளுள் ஒருவராக இருந்தார். அது இந்திய நாடகங்களின் மறுமலர்ச்சிக்கான காலமாக பார்க்கப்பட்டது. அவர் தொன்மவியலுடன் வரலாற்றை குழைத்து நாகமண்டலம், துக்ளக் மற்றும் ஹயவாதனா போன்ற நாடகங்களை எழுதியுள்ளார். அவர் 1961ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டு பல்கலையில் கல்வி பயின்றுகொண்டிருந்தபோது தனது முதல் நாடகமான 'யயாதி'யை எழுதினார்.

✓ கர்னாட், அவரது நாடகங்களுள் பெரும்பாலானவற்றை தானே மொழிபெயர்த்துள்ளார். 2018இல் வெளியிடப்பட்ட 'ராக்ஷஸ தங்கடி' அவரது கடைசி நாடகமாகும். இந்தியாவில் இலக்கியத்துக்கு வழங்கப்படும் மிகவுயர்ந்த கௌரவமான ஞானபீட விருதை 1998இல் பெற்றார். பத்ம ஸ்ரீ மற்றும் பத்ம பூஷன் விருதையும் அவர் பெற்றுள்ளார்.

**6.** அண்மையில் காலமான மோகன் ரங்காச்சாரி, எந்தப் பிராந்தியத் திரையுலகில் மூத்த திரைக் கதை எழுத்தாளராவார்?

A) தமிழ் ☑



B) மலையாளம்

C) தெலுங்கு

D) கன்னடம்

✓ பிரபல நாடகக்கலைஞரும் தமிழ்த்திரைப்படங்களின் திரைக்கதை எழுத்தாளருமான கிரேசி மோகன் (67), ஜூன்.10 அன்று சென்னையில் காலமானார். மோகன் இரங்காச்சாரி என்னும் இயற்பெயருடைய இவர் 1952இல் பிறந்தார். 'பாலவாக்கத்தில் கிரேஸி திருடர்கள்' என்ற அவரது பிரபல நாடகத்திற்குப் பிறகு 'கிரேஸி' என்னும் அடைமொழியுடன் அழைக்கப்பட்டார்.

✓ தொழிற்முறையில் பொறியியலாளரான இவர், மேடை நாடகங்களை எழுதத்தொடங்கினார். பின்னர், 1979இல் 'கிரேஸி கிரியேசன்ஸ்' என்ற பெயரில் தனது சொந்த நாடகக்குழுவை நிறுவினார். ஒரு நாடக கலைஞர் என்ற நீண்ட மற்றும் வெற்றிகரமான வாழ்க்கையைத் தொடர்ந்து அவர் திரைத்துறையில் நுழைந்தார். கமல்ஹாசன் நடித்த 'ஔவை சண்முகி', 'வசூல் ராஜா MBBS' மற்றும் 'மைக்கேல் மதன

காமராஜன்' உள்ளிட்ட பல வெற்றிப்படங்களுக்கு கதைகளை இவர் எழுதியுள்ளார். தவிர, பல திரைப் படங்களில் நடித்தும் உள்ளார்.

**7.** லோத்தலில் ஒரு தேசிய கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகத்தை அமைக்க, இந்தியா எந்த நாட்டோடு கூட்டு சேர்ந்துள்ளது?



A) ஐக்கிய இராஜ்ஜியம்

B) போர்ச்சுகல் ☑

C) ஜப்பான்

D) பிரான்ஸ்

✓ குஜராத்தில் உள்ள பண்டைய இந்தியத் தளமான லோத்தலில் ஒரு தேசிய கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகத்தை அமைக்க இந்தியா போர்ச்சுகலுடன் கூட்டு சேர்ந்துள்ளது. இது போர்த்துகீசிய கடற்படையால் நிர்வகிக்கப்படும் லிஸ்பனில் உள்ள ஓர் அருங்காட்சியகத்தைப் போல அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

✓ இக்கடல்சார் அருங்காட்சியகத்தை கட்டமைப்பதற்காக இந்திய அரசு மானியத்தை ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்திற்கான அடிக்கல்லை பிரதமர் மோடி கடந்த மார்ச்சில் நாட்டினார். இந்திய தொல்லியல் ஆய்வு மையம், மாநில அரசு மற்றும் பிற பங்குதாரர்களின் ஈடுபாட்டுடன் இத்திட்டத்தை மத்திய கப்பல் அமைச்சகம் தனது சாகர்மாலா திட்டத்தின் மூலம் செயல்படுத்தும்.

**8.** அண்மையில் காலமான R V ஜானகிராமன், எந்த மாநில / யூனியன் பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சராக இருந்தார்?



A) தமிழ்நாடு

B) கர்நாடகா

C) புதுச்சேரி ☑

D) ஒடிசா

✓ புதுச்சேரி முன்னாள் முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த உறுப்பினருமான R V ஜானகிராமன் (79), புதுச்சேரியில் ஜூன்.10 அன்று காலமானார். திமுக மற்றும் தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணியின் தலைவராக 1996 மற்றும் 2000க்கு இடையில் அவர் முதலமைச்சராக இருந்தார். புதுச்சேரியின் நெல்லித்தோப்பு சட்டமன்றத் தொகுதியிலிருந்து 5 முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**9.** ஜப்பானில் நடந்த வர்த்தகம் & மின்னணுப் பொருளாதாரம் குறித்த 2019 G-20 அமைச்சரவை சந்திப்பில், இந்தியத் தூதுக்குழுவுக்கு தலைமை தாங்கியவர் யார்?

A) S ஜெய்சங்கர்

B) நிதின் கட்கரி

C) நிர்மலா சீதாராமன்

D) பியுஷ் கோயல் ☑

✓ ஜூன்.8 அன்று ஜப்பானில் உள்ள சுகுபா நகரில் நடந்த வர்த்தகம் மற்றும் மின்னணுப் பொருளாதாரம் குறித்த இரண்டு நாள் G-20 அமைச்சரவை சந்திப்பில் பங்கேற்ற இந்திய தூதுக்குழுவிற்கு மத்திய வணிக மற்றும் தொழிற்துறை மற்றும் இரயில்வே அமைச்சர் பியுஷ் கோயல் தலைமைதாங்கினார். G-20 வர்த்தக அமைச்சர்கள் கலந்துரையாடல்கள் முறையான கலந்துரையாடல்களில் G-20 உச்சி மாநாடு தலைவர்களின் நிகழ்ச்சி நிரலின் ஒருபகுதியாக அமையும். மேலும், அது உச்சிமாநாட்டின் பிரகடனத்தின் ஒருபகுதியாகவும் இருக்கும்.

✓ ஐம்பதுக்கும் மேற்பட்ட வர்த்தகம் மற்றும் மின்னணுப் பொருளாதார அமைச்சர்கள் G-20 வரலாற்றில் முதன்முறையாக சுகுபாவில் ஒன்றுகூடி, G-20 பொருளாதாரங்கள் எவ்வாறு வர்த்தகத்தையும் முதலீட்டையும் ஊக்குவிக்க முடியும் என்பது பற்றியும், மின்னணுப் பொருளாதாரத்தின் (Digital Economy) வளர்ச்சியிலிருந்து அதிகபட்ச நன்மைகளை எவ்வாறு பெறமுடியும் என்பது பற்றியும் விவாதித்தன. நடப்பாண்டு வர்த்தகம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரக் கூட்டம் என்பது G-20 உச்சி மாநாட்டோடு, ஜப்பானில் நடைபெற்று வரும் 8 அமைச்சரவைக் கூட்டங்களுள் ஒன்றாகும்

✓ வேளாண் அமைச்சர்கள், நிதியமைச்சர்கள் & மத்திய வங்கி ஆளுநர்களின் சந்திப்பு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர்களின் சந்திப்பு, சுற்றுலா அமைச்சர்கள் சந்திப்பு, மாற்று எரிசக்தி மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான சர்வதேச சுற்றுச்சூழல் தொடர்பான அமைச்சரவை சந்திப்பு, சுகாதார அமைச்சர்கள் சந்திப்பு மற்றும் வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு ஆகியவை நடக்கும் பிற ஏழு சந்திப்புகளாம். G-20 உறுப்பினர்கள், உலகின் மூன்றில் இரண்டு பங்கு மக்களையும் அதன் பொருளாதாரத்தில் 85 சதவீதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.


**10.** அமெரிக்க தத்துவச் சங்கத்தின் (American Philosophical Society - APS) உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ள இந்தியர் யார்?

A) விக்ரம் சேத்

B) ரொமிலா தாப்பர் (Romila Thapar) ☑

C) சேத்தன் பகத்

D) அமிதாப் கோஷ்



- பிரபல வரலாற்றாசிரியரும், எழுத்தாளருமான Dr. ரொமிலா தாப்பர், ஐக்கிய அமெரிக்காவின் பழமையான கற்றறிந்தோர் அவையான (Learned Society) அமெரிக்க தத்துவச் சங்கத்தின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். தில்லியில் உள்ள ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற வரலாற்றுப் பேராசிரியரான Dr.தாப்பர், அமெரிக்க தத்துவச் சங்கத்தால் அதன் வருடாந்திர வசந்தகால கூட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 1,013 உறுப்பினர்களுள் ஒருவராவார்.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- காணாமல் போன செல்போன்கள் மற்றும் இருசக்கர வாகனங்களை கண்டுபிடிக்க உதவும் 'DIGICOP Version 2' என்ற செயலி தொடங்கிவைக்கப்பட்டது. சென்னை பெருநகர காவல்துறையின் DIGICOP செயலியில் CCTNS என்ற புதிய சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் தாங்களிருக்கும் இடத்திலிருந்தே காவல்துறையில் புகாரளிக்க இந்தப் புதிய சேவை உதவுகிறது.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.** 2021ஆம் ஆண்டு முதல் ஒற்றைப் பயன்பாடுடைய நெகிழியை தடை செய்ய முடிவுசெய்துள்ள வட அமெரிக்க நாடு எது?



A) கனடா ☑

B) மெக்ஸிகோ

C) ஐக்கிய அமெரிக்கா

D) கியூபா

- ✓ 2021ஆம் ஆண்டிலிருந்து தீங்கு விளைவிக்கும் ஒற்றைப் பயன்பாடுடைய நெகிழிப்பொருட்கள் தடை செய்யப்படும் எனக் கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அண்மையில் அறிவித்துள்ளார். பெருங்கடலில் கலக்கும் கழிவுகளின் அளவுகளை குறைப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. உலகில் உள்ள பெருங்கடல்களை நிரப்பியிருக்கும் நெகிழிப்பைகள், உறிஞ்சுக் குழல்கள் மற்றும் வெட்டுக்கருவிகளை நீக்குவதற்கான ஓர் உலகளாவிய சவாலாக அவர் இதனை அறிவித்துள்ளார்.
- ✓ கனடாவில் 10 சதவீதத்துக்கும் குறைவான நெகிழிப் பொருட்கள்தான் மறுசுழற்சி செய்யப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் 10 இலட்சத்துக்கும் அதிகமான பறவைகள் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் நெகிழிக் கழிவுகளால் பாதிப்புக்குள்ளாவதாக கனடிய அரசாங்கம் தெரிவித்துள்ளது. கடல் சூழலை குப்பைப்படுத்தும் நெகிழிகளில் 70%, ஒற்றைப்பயன்பாடுடைய நெகிழிப் பொருட்களாகவே உள்ளன. கடந்தாண்டு இதேபோன்று நெகிழிக்கு தடைவிதித்த ஐரோப்பிய ஒன்றியத்தைப் போலவே, தற்போது கனடாவும் நெகிழிக்கு தடை விதித்துள்ளது.
- ✓ கனடா, பிரான்சு, ஜெர்மனி, பிரிட்டன் மற்றும் இத்தாலி ஆகியவை ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து கியூபெக்கில் நடந்த 2018 G7 உச்சிமாநாட்டில், பெருங்கடல்களில் ஏற்பட்டுள்ள மாசுக்கு எதிரான ஒரு புதிய சாசனத்தில் கையெழுத்திட்டன. இந்தக் கட்டமைப்பற்ற பெருங்கடல் நெகிழிகள் சாசனமானது அதில் பங்கேற்கும் நாடுகளுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் 2030ஆம் ஆண்டுக்குள் அனைத்து நெகிழிகளையும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய, மறுசுழற்சி செய்யக்கூடிய நெகிழிகளாக மாற்றுவதில் ஈடுபடுவதற்கு அழைப்பு விடுத்துள்ளது.

**2.** ரெப்போவுடன் இணைக்கப்பட்ட வீட்டுக்கடன் திட்டத்தை அறிமுகம் செய்யவுள்ள வங்கி எது?

A) பாரத ஸ்டேட் வங்கி (SBI) ☑

B) பஞ்சாப் தேசிய வங்கி

C) பரோடா வங்கி

D) பேங்க் ஆப் இந்தியா



✓ கடனுக்கான வட்டி வீதங்கள் மற்றும் பெரும் சேமிப்பு வைப்பு வீதங்களை ரெப்போ வீதத்துடன் இணைத்த பிறகு, SBIஆனது ஜூலை.1 முதல் ரெப்போ வீதத்துடன் இணைக்கப்பட்ட வீட்டுக்கடன் திட்டத்தை அறிமுகப்படுத்த முடிவுசெய்துள்ளது. தற்போதைய ரெப்போ வட்டி வீதம் 5.75 சதவீதமாக உள்ளது. இத்திட்டத்தின்கீழ் வரும் SBI வீட்டுக்கடன்களுக்கான வட்டி வீதங்கள் 2.65% என்ற வீதத்தில் நிர்ணயிக்கப்படும். எனவே, வீட்டுக்கடன் வட்டி வீதம் 8.40% ஆக இருக்கும்.

✓ தற்போது, 8.55 சதவீதத்தில் SBI வீட்டுக்கடன் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. RBI அதன் ரெப்போ வீதத்தை 6 சதவீதத்திலிருந்து 5.75% சதவீதமாக குறைத்த பிறகு, பொருளீட்டுக்கடன் / மிகைப்பற்று வாடிக்கையாளர்களுக்கான வட்டி வீதத்தையும் (ரூ.1 இலட்சத்திற்கு மேல் வரம்பு) SBI குறைத்துள்ளது. இப்போது பொருளீட்டுக்கடன் / மிகைப்பற்று வாடிக்கையாளர்களுக்கான விளைவுறு ரெப்போவுடன் இணைக்கப்பட்ட கடன் வீதம் 8 சதவீதமாக உள்ளது. குறுகிய – கால பணப்புழக்க இடர்களிலிருந்து (Liquidity Mismatches) வங்கிகள் மீண்டுவருவதற்காக, அவ்வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் பணப்புழக்கத்திற்கான வட்டி வீதமே ரெப்போ வட்டி வீதமாகும்.

**3.** இந்தோனேசியாவின் பின்வரும் எத்தீவில், சினாபுங் மலை (Mt. Sinabung) அமைந்துள்ளது?



A) ஜாவா

B) பாலி

C) சுமத்ரா ☑

D) சும்பாவா

✓ சுமத்ரா தீவிலுள்ள சினாபுங் மலையானது ஜூன்.9 அன்று சுமார் ஒன்பது நிமிடங்களுக்கு வெடித்து, வானில் ஏழு கி.மீ., தூரத்திற்கு எரிமலை சாம்பலைக் கக்கியது. இந்த எரிமலை, கடைசியாக 2010ஆம் ஆண்டில் வெடித்தது. 2,460 மீ (8,071 அடி) உயரங்கொண்ட சினாபுங் மலை, இந்தோனேசியாவின் மிகவும் தீவிரமான செயல்நிலை எரிமலைகளுள் ஒன்றாகும். 2010ஆம் ஆண்டில் வெடிப்பதற்கு முன்பு வரை, சுமார் நானூறு ஆண்டுகளாக இம்மலை செயலற்றதாகவே இருந்தது.

✓ வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு, இந்தோனேசியாவில் கிட்டத்தட்ட 130க்கும் மேற்பட்ட தீவிர செயல்நிலை எரிமலைகள் உள்ளன. கடந்த மாதம், இந்தோனேசியாவின் பாலி தீவில், ஆகூங் மலை வெடித்துச் சிதறியது குறிப்பிடத்தக்கது.

**4.** பின்வரும் எந்த மாநிலத்தில், இந்தியாவின் முதல் தொன்மாவுக்கான அருங்காட்சியகத்துடன் இணைந்த பூங்கா (Dinosaur – Museum – Cum – Park) அமைக்கப்பட்டுள்ளது?




A) இராஜஸ்தான்

B) குஜராத் ☑

C) ஹிமாச்சலப்பிரதேசம்

D) ஒடிசா

- ✓ தொன்மாவுக்கான இந்தியாவின் முதல் அருங்காட்சியகம் மற்றும் புதைப்படிவ பூங்காவை சமீபத்தில் மகிசாகர் மாவட்டத்தின் பாலசினோர் நகரத்துக்கு அருகில் அமைந்துள்ள ரையோலி கிராமத்தில், குஜராத் முதலமைச்சர் விஜய் ரூபானி திறந்துவைத்தார். இப்புதிய அருங்காட்சியகமானது, ரையோலி கிராமத்தில் தொன்மாக்கள் சுதந்தரமாக சுற்றித்திரிந்த அந்த வரலாற்றுக்கு முந்தைய காலகட்டத்தை கண்முன்னே கொண்டுவருகிறது.

- ✓ குஜராத்தில் கண்டறியப்பட்ட *Rajasaurus Narmadensis*இன் மெய்யளவான சிற்பம் உட்பட ஐம்பதுக்கும் மேற்பட்ட தொன்மாக்களின் சிற்பங்கள், இந்த அருங்காட்சியகத்தில் அமைக்கப்பட்டுள்ளன. 3D திரையிடல்கள், 360° மெய்நிகர் யதார்த்த விளக்கக்காட்சிகள், ஊடாடும் கணினிகள், விளையாட்டு முனையங்கள் மற்றும் பிற வசதிகளை இந்த அருங்காட்சியம் கொண்டுள்ளது. அரசு அதிகாரிகளின் கூற்றுப்படி, ரையோலி, உலகளவில் மூன்றாவது மிகப்பெரிய புதைப்படிவத தளமாகும். இங்கு, சுமார் 10,000 தொன்மா முட்டைகள் கண்டறியப்பட்டுள்ளன.

**5.** எந்நாடு 'IndSpaceEx' என்ற தனது முதல் உருவகப்படுத்தப்பட்ட விண்வெளி போர்ப்பயிற்சியை (Simulated Space Warfare Exercise) நடத்த முடிவுசெய்துள்ளது?

A) இத்தாலி

B) இஸ்ரேல்

C) இந்தோனேசியா

D) இந்தியா ☑



- ✓ பாதுகாப்பு அமைச்சகத்தின் ஒருங்கிணைந்த பாதுகாப்பு பணியாளர்கள் தலைமையின்கீழ், ஜூலை மாதம் கடைசி வாரத்தில் 'IndSpaceEx' என்று பெயரிடப்பட்ட முதலாவது உருவகப்படுத்தப்பட்ட விண்வெளி போர்ப் பயிற்சியை நடத்த இந்தியா திட்டமிட்டுள்ளது. அறிவியல் துறைசார்ந்தோர் உட்பட அனைத்து இராணுவத் துறைசார்ந்தோரும் அதில் கலந்துகொள்வார்கள்.

- ✓ விண்வெளித்துறையில், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு நலனுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் வளர்ந்து வரும் சீனாவின் ஆதிக்கத்தை எதிர்ப்பதும், விண்வெளி போர்ப் பயிற்சியில் ஏற்படக்கூடிய சவால்களைப் புரிந்துகொள்வதும், இந்தப் பயிற்சியின் நோக்கமாகும்.

**6.** பின்வரும் எந்த நாட்டில், குவாதலஜாரா சர்வதேச புத்தகக் கண்காட்சியை (Guadalajara International Book Fair) நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது?

A) மெக்ஸிகோ ☑

B) கனடா

C) ஜெர்மனி

D) ஸ்பெயின்

Guadalajara International Book Fair®

- ✓ நவம்பர் 30 முதல் டிசம்பர் 8 வரை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள, மெக்ஸிகோவில் நடைபெறும் 33ஆவது குவாதலஜாரா சர்வதேச புத்தகக்கண்காட்சியில், இந்தியா, கௌரவ விருந்தினராக (Guest of Honor) நியமிக்கப்பட்டுள்ளது. ஸ்பானிய மொழி பேசும் உலகின், மிகப்பெரிய புத்தகக் கண்காட்சியாக இந்தக் கண்காட்சி இருக்கும். இக்கண்காட்சியில், இந்தியாவுக்கென அர்ப்பணிக்கப்பட்ட அரங்கில், 35க்கும் மேற்பட்ட இந்திய எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களின் படைப்புகளும், அதோடு 15 நூல் வெளியீட்டு நிறுவனங்களின் படைப்புகளும் காட்சிக்கு வைக்கப்படும்.

- ✓ புகைப்பட நூல்கள், கைவினைப்பொருட்கள் மற்றும் ஓவியங்களுடன் 'மகாபாரதம்', 'இராமாயணம்' உள்ளிட்ட பண்டைய / அரிய நூல்களின் கையெழுத்துப் பிரதிகள் இக்கண்காட்சியில் வைக்கப்படும். இந்தக் கண்காட்சியில், இந்தியாவின் பங்கேற்பில் 'தங்கல்', 'சென்னை எக்ஸ்பிரஸ்' மற்றும் 'ஓம்காரா' போன்ற திரைப்படங்களைத் திரையிடும் திரைப்பட விழாவும் இடம்பெறும்.

**7.** கஜகஸ்தானின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?

A) அமிர்ஜன் கோசனோவ்

B) டானியா யஸ்பாயேவா

C) காசிம் – ஜோமார்ட் டோக்காயேவ் (Kassym-Jomart Tokayev) ☑

D) டோலூடாய் ராகிம்பெகோவ்



- ✓ ஜூன்.9 அன்று நடந்த கஜகஸ்தானின் 2019ஆம் ஆண்டு அதிபர் தேர்தலில், 70.96% வாக்குகளைப் பெற்று அந்நாட்டின் இடைக்கால அதிபர் காசிம் – ஜோமார்ட் டோக்காயேவ் வெற்றி பெற்றார். மத்திய தேர்தல் ஆணையத்தால் தெரிவு செய்யப்பட்ட அதிபராக அங்கீகரிக்கப்பட்ட அவர், ஜூன்.12 அன்று பதவியேற்றுக்கொண்டார்.

- ✓ முன்னதாக, 1992ஆம் ஆண்டில் நாடு சுதந்தரம் பெற்றதிலிருந்து அதிபராக இருந்து வந்த நூர்சுல்தான் நசர்பயேவ் பதவிவிலகிய பின், கடந்த மார்ச்.20 அன்று, டோக்காயேவ் கஜகஸ்தானின் இடைக்கால அதிபராக பதவியேற்றார். கஜகஸ்தான் குடியரசின் அதிபர் என்பவர் அந்நாட்டின் தலைவரும், முப்ப -டைத்தளபதியும், கஜகஸ்தான் குடியரசுக்கு உட்பட்ட உயரலுவலகங்களின் தலைவரும் ஆவார்.

**8.** எந்த அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் அறிவியலாளர்கள், நிலத்தடி நீர் பெருங்கடல்களைச் சந்திப்பதை காண்பிக்கும் ஓர் உலகளாவிய வரைபடத்தை உருவாக்கியுள்ளனர்?

A) ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகம்

B) ஓஹியோ மாநிலப் பல்கலைக்கழகம் ☑

C) யேல் பல்கலைக்கழகம்

D) டியூக் பல்கலைக்கழகம்

- ✓ அமெரிக்காவில் உள்ள ஓஹியோ மாநிலப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள், உலகெங்கும் நிலத்தடி நீர் பெருங்கடல்களைச் சந்திக்கும் புள்ளிகளின் உயர் தெளிவுத்திறன் வரைபடங்களை

(High – Resolution Maps) உருவாக்கியுள்ளனர். இதன் வகையில் இத்தகைய முதல் பகுப்பாய்வானது குடிநீர் மற்றும் பெருங்கடல் முதலிய இரண்டையும் பாதுகாக்க உதவும்.

✓ வெப்பமண்டலப் பகுதிகளுக்கு அருகேயுள்ள பெருங்கடல்களில், கிட்டத்தட்ட பாதியளவு தூய நிலத்தடி நீர் கலப்பதாக இந்த ஆய்வு தெரிவிக்கிறது. மேலும், கண்டத்தட்டால் நிலைபெற்றிருக்கும் பகுதிகளை ஒப்பிடும்போது, பிளவுக்கோட்டுக்கு (Fault line) அருகிலிருக்கும் பகுதிகள் பெருமளவு நிலத்தடி நீரை பெருங்கடலுக்குள் அனுப்புவதாக இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது. இக்கண்டறிவுகள், கடலோர மக்களுக்கு அவர்களின் குடிநீரை சிறப்பான முறையில் பாதுகாக்க / நிர்வகிக்க உதவும்.

**9.** காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் (Bureau of Police Research and Development – BPR&D) புதிய தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

Bureau of Police Research and Development
Ministry of Home Affairs
पुलिस अनुसंधान एवं विकास ब्यूरो, गृह मंत्रालय

**A)** V H தேஷ்முக்

**B)** V S கௌமுதி (V S Kaumudi) ☑

**C)** R P தாகூர்

**D)** இந்த்லா ஸ்ரீநிவாஸ்

✓ காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் புதிய தலைமை இயக்குநராக V S கௌமுதி IPS அதிகாரி (ஆந்திரப்பிரதேசம் : 1986) நியமிக்கப்பட்டுள்ளார். ஈராண்டு காலத்திற்கோ அல்லது மேலதிக உத்தரவு வரும் வரையோ அவர் இப்பதவியில் நீடிப்பார். இவருக்கு முன்பு, 1984 தொகுதி IPS அதிகாரி சுதீப் லக்டாகியா அந்தப் பதவியில் இருந்தார். இந்த நியமனத்திற்கு முன்பு, மத்திய சேமக்காவல் படைக்கான (CRPF) கூடுதல் தலைமை இயக்குநராக அவர் பதவி வகித்து வந்தார்.

**10.** 17ஆவது மக்களவையின் தற்காலிக அவைத்தலைவர் (pro-tem speaker) யார்?

**A)** விவேக் சேஜ்வாக்கர்

**B)** வீரேந்திர குமார் (Virendra Kumar) ☑

**C)** அனில் பிரோஜியா

**D)** ஷங்கர் லால்வானி



✓ மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த பாரதீய ஜனதா கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வீரேந்திர குமார், 17ஆவது மக்களவையின் தற்காலிக அவைத்தலைவராக இருப்பார். இவர், திகம்கார் மக்களவைத் தொகுதியிலிருந்து 7ஆவது முறையாக வெற்றிபெற்று நாடாளுமன்ற உறுப்பினரானவர். தற்காலிக அவைத்தலைவராக, மக்களவையின் முதல் அமர்வுக்கு அவர் தலைமை தாங்குவார் மற்றும் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவியேற்பு விழாவையும் அவர் நிர்வகிப்பார்.

✓ புதிதாக அமைக்கப்பட்ட 17ஆவது மக்களவையின் முதல் அமர்வு ஜூன் 17 முதல் ஜூலை 26 வரை நடைபெறவுள்ளது. தற்காலிக அவைத்தலைவராக, மக்களவையின் அவைத்தலைவர் தேர்தலையும் குமார் மேற்பார்வையிடுவார்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** நடப்பாண்டு குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு நாளுக்கான (World Day against Child Labour) கருப்பொருள் என்ன?




**A)** End Child Labour in Supply Chains

**B)** Children shouldn't Work in Fields, But on Dreams ☑

**C)** Generation Safe & Healthy

**D)** No to Child Labour – YES to Quality Education!

✓ குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கத் தேவையான நடவடிக்கைகள் மற்றும் முயற்சிகளில் கவனம் செலுத்துவதற்காக, ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.12 அன்று குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்நாள் அரசாங்கங்கள், பணியமர்த்துநர்கள் (Employers), தொழிலாளர் அமைப்புகள், சமூக அமைப்புகள் மற்றும் மில்லியன் கணக்கான மக்களை ஒன்றிணைத்து குழந்தைத் தொழிலாளர்களின் அவலநிலையையும், அவர்களுக்கு உதவுவதற்கான நடவடிக்கைகளையும் சுட்டிக்காட்டுகிறது.

**2.** இந்தியாவுக்கான சீனாவின் புதிய தூதராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?



**A)** லுவோ சாஹூய்

**B)** லியு யூஃபா

**C)** சன் வெய்டோங் (Sun Weidong) ☑

**D)** வெய்வெய்

✓ சீனா, இந்தியாவுக்கான புதிய தூதராக மூத்த தூதர் சன் வெய்டோங்கை நியமித்துள்ளது. 2009 – 2013ஆம் ஆண்டு வரை சீனாவுக்கான இந்தியத் தூதராக வெளியுறவுத் துறை அமைச்சர் S ஜெய்சங்கர் பெய்ஜிங்கில் பணியாற்றிய காலத்தில், தெற்காசிய விவகாரங்களில் நிபுணரான சன் வெய்டோங், அவருடன் நெருக்கமாக பணியாற்றியுள்ளார்.

✓ பாகிஸ்தானுக்கான தூதராகவும் பணியாற்றியுள்ள சன், தற்போது வெளியுறவு அமைச்சகத்தின் கொள்கை மற்றும் திட்டமிடல் துறையின் தலைமை இயக்குநராக உள்ளார். இவருக்கு முன்பு இந்தியாவுக்கான சீனாவின் தூதராக இருந்த லுவோ சாஹூய், வெளியுறவு விவகாரங்களின் துணை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**3.** கர்நாடகாவின் முதல் சூரிய ஆற்றலில் இயங்கும் கிராம ஊராட்சியாக மாறியுள்ள அமசெபைலு (Amasebailu) கிராமம், பின்வரும் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

A) பெல்காம்

B) பெல்லாரி

C) சிக்கமகளூரு

D) உடுப்பி ☑



✓ உடுப்பி மாவட்டத்தின் குந்தபுரா வட்டத்தில் உள்ள அமசெபைலு கிராம ஊராட்சியானது கர்நாடக மாநிலத்தின் முதல் சூரிய ஆற்றலில் இயங்கும் கிராம ஊராட்சியாக மாறியுள்ளது. ரூ.2.13 கோடி செலவில், 1800க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு சூரிய ஒளி விளக்குகள் (Solar Lamps) வழங்கப்பட்டுள்ளன.

✓ இத்திட்டத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் 30:20 என்ற விகிதத்தில் நிதியுதவி அளித்துள்ளன, மீதமுள்ளவை ஊராட்சி மற்றும் தொண்டு நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ளன. செல்கோ லைட் பிரைவேட் லிமிடெட் உடனான ஒப்பந்தத்தின்படி, இச்சூரிய ஒளி விளக்குகள் 5 ஆண்டுகளுக்கான உத்தரவாதத்தைக் கொண்டுள்ளன. ஒளி விளக்குகளில், உத்தரவாதக் காலத்திற்குள் ஏதேனும் பழுது ஏற்பட்டால் அவை விநியோகிப்பாளரால் மாற்றித்தரப்படும்.


**4.** மாநிலங்களவையின் அவைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A) தாவர்சந்த் கெலாட் ☑

B) பியுஷ் கோயல்

C) இராஜ்நாத் சிங்

D) பிரகலாத் ஜோஷி




✓ மத்திய சமூகநீதி & அதிகாரமளித்தல் துறை அமைச்சர் தாவர்சந்த் கெலாட், மாநிலங்களவையின் அவைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். முந்தைய ஆட்சியில் மத்திய நிதியமைச்சராக இருந்த அருண் ஜேட்லி, இந்தப் பொறுப்பை வகித்தார். உடல்நிலை காரணமாக அவர் இந்த முறை அமைச்சர் பதவியோ முக்கியப் பொறுப்புகளோ வேண்டாம் எனக் கூறிவிட்டார்.

✓ பா.ஜ.க.வின் பட்டியலின மக்களின் முகமாக இருக்கும் கெலாட், அனுபவமிக்க நாடாளுமன்ற உறுப்பினராவார். ம.பி சட்டமன்றத்துக்கு பலமுறை தேர்வு செய்யப்பட்டுள்ள அவர், மக்களவை, மாநிலங்களவை உறுப்பினராகவும் பலமுறை பதவி வகித்துள்ளார்.

✓ இதற்கிடையே, மத்திய இரயில்வே & வர்த்தக அமைச்சர் பியுஷ் கோயல், இந்திய நாடாளுமன்றத்தின் மேலவையின் துணைத் தலைவராக பொறுப்பேற்றுக்கொள்வார். நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் உரை நிகழ்த்தும் நாளான வரும் 20ஆம் தேதி முதல், பட்ஜெட் அமர்வுக்காக மாநிலங்களவை கூட்டப்படும். இந்த அமர்வு, வரும் ஜூலை.26 வரை தொடரும். மொத்தத்தில், நாடாளுமன்றத்தின் மேலவையில், 27 கூட்டங்கள் நடைபெறும்.

**5.** தற்போதுள்ள கடனீவோருக்கு இடையேயான ஒப்பந்தத்தில் (Inter-Creditor Agreement – ICA) மாற்றங்களை பரிந்துரை செய்துள்ள சஷக்த் குழுவின் (Sashakt Committee) தலைவர் யார்?



A) சந்தீப் பக்ஷி

B) மனோகரன்

C) சுனில் மேத்தா ☑

D) வேணுகோபால் தூத்

- ✓ பஞ்சாப் தேசிய வங்கியின் செயல் சாரா தலைவர் சுனில் மேத்தா தலைமையிலான சஷக்த் குழு, இந்திய ரிசர்வ் வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட திருத்தப்பட்ட குறைந்தபட்ச வாக்களிப்பு வரம்பு மற்றும் முடிவெடுப்பதற்கான பிற மாற்றங்களை ஒருங்கிணைப்பதற்காக, தற்போதுள்ள கடனீவோருக்கு இடையேயான ஒப்பந்தத்தில் மாற்றங்களைப் பரிந்துரைத்துள்ளது.

- ✓ ரிசர்வ் வங்கியின் புதிய கட்டமைப்பின் கீழ், முதல் தவணைத் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் கடன் வாங்குபவரின் கணக்கை மீளாய்வு செய்யும் சமயத்தில், கடனீவோர்கள், கடனீவோருக்கு இடையே -யான ஒப்பந்தத்தில் இணைந்திருப்பது கட்டாயமாகும். இந்தப் புதிய கட்டமைப்பானது, 75% (மொத்த நிலுவையில் உள்ள வசதிகளின் மதிப்பால்) மற்றும் 60% பங்குகளை வைத்துள்ள கடனீவோர்கள் முடிவெடுப்பது மற்றும் கருத்து வேறுபாடுடைய கடனீவோர்களை பாதுகாப்பது உள்ளிட்ட கடனீவோரு -க்கு இடையேயான ஒப்பந்தத்தில் சேர்க்க வேண்டிய சில அளவுருக்களையும் வகுத்துள்ளது.

- ✓ புதிய கட்டமைப்பு மற்றும் சொத்து சீரமைப்பு நிறுவனங்களின் கீழ் வரும் அனைத்து கடனீவோர்களா -லும் இக்கடனீவோருக்கு இடையேயான ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும். இந்தக் கட்டமைப்பு அனைத்து வங்கிகள், பகுதிநேர நிதி நிறுவனங்கள், சிறு நிதி வங்கிகள், அமைப்புரீதியாக முக்கியமான - வைப்புகள் கோராத வங்கியல்லாத நிதி நிறுவனங்கள், அதேபோல் வைப்புகள் கோரும் வங்கியல்லாத நிதி நிறுவனங்களுக்கு பொருந்தும்.

**6.** 2019 பிரெஞ்சு ஓப்பன் டென்னிஸ் போட்டியில் பெண்கள் பட்டத்தை வென்றவர் யார்?



A) மார்க்கெட்டா வொண்ட்ரூசோவா

B) ஆஷ்லி பார்டி (Ashleigh Barty) ☑

C) ஜோஹன்னா கொண்டா

D) மடிசன் கீய்ஸ்

- ✓ ஆஸ்திரேலிய டென்னிஸ் வீராங்கனையும், முன்னாள் கிரிக்கெட் வீராங்கனையுமான ஆஷ்லி பார்டி, 2019 பிரெஞ்சு ஓப்பன் டென்னிஸ் போட்டியில் பெண்கள் பட்டத்தை வென்றுள்ளார். பாரிஸில் உள்ள ரோலண்ட் கேரோஸில் நடந்த இறுதிப்போட்டியில், 6-1, 6-3 என்ற செட் கணக்கில் மார்க்கெட்டா வொண்ட்ரூசோவாவை அவர் தோற்கடித்தார்.

- ✓ 1973ஆம் ஆண்டிலிருந்து மார்கரெட் மைதானத்தில் பிரெஞ்சு ஓப்பன் ஒற்றையர் பட்டத்தை வெல்லும் முதல் ஆஸ்திரேலிய ஆட்டக்காரராக (ஆண் / பெண்) பர்டி உள்ளார். 2019ஆம் ஆண்டு பிரெஞ்சு ஓப்பன் போட்டியானது வெளிப்புற களிமண் மைதானங்களில் விளையாடப்பட்ட 123ஆவது கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியாகும்.

**7.** இந்தியாவின் எந்தப் பல்கலையைச் சேர்ந்த அறிவியலாளர்கள், வடகிழக்கு இந்தியாவில், மைக்ரோஹைலிட் பேரினத்தின் மைக்ரைலெட்டாவைச் சேர்ந்த ஒரு புதிய வகை 'நெல் தவளை'யை ('Paddy Frog' belonging to the Microhylid genus Micryletta) கண்டறிந்துள்ளனர்?



A) தில்லி பல்கலைக்கழகம் ☑

B) லவ்லி புரொபஷனல் பல்கலைக்கழகம்

C) ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம்

D) கல்கத்தா பல்கலைக்கழகம்

- ✓ தில்லி பல்கலைக்கழகம் மற்றும் இந்திய வனவுயிரி நிறுவனத்தின் அறிவியலாளர்கள் குழுவானது, இந்தோனேசியா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து, வடகிழக்கு இந்தியாவில் குறிப்பாக அஸ்ஸாமிலிருந்து ஒரு புதிய வகை 'நெல் தவளை'யை கண்டுபிடித்துள்ளனர். இந்தத் தவளை, மைக்ரோஹைலிட் பேரினத்தின் மைக்ரைலெட்டாவைச் சேர்ந்ததாகும். இது, தென் கிழக்காசியாவில் பரவலாக காணப்படும் குறுகிய – வாய்ப் பகுதியுடைய தவளைகளின் குழுவாகும்.
- ✓ தற்போது, இக்குழுவில் 4 அங்கீகரிக்கப்பட்ட இனங்கள் மட்டுமே உள்ளன. வடகிழக்கு இந்தியாவில் இருந்து புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த மைக்ரைலெட்டா தவளை, தென்கிழக்கு மற்றும் கிழக்காசியா முழுவதும் முன்னர் அறியப்பட்ட அனைத்து இனங்களுடனும் DNA மற்றும் உருவவியல் இரண்டையும் விரிவாக ஒப்பிட்ட பின்னர், ஒரு புதிய இனமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் புதிய தவளை இனத்துக்கு 'ஐஷானி' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தத் தவளை கண்டுபிடிக்கப்பட்ட இந்தியாவின் வடகிழக்கு பகுதியைக் குறிக்கும் சமற்கிருத சொல்லான 'ஐஷானி' அல்லது 'ஐசானி' (வடகிழக்கு என்று பொருள்) என்பதிலிருந்து இச்சொல் பெறப்பட்டுள்ளது.

**8.** இந்தியத் துணைக் குடியரசுத்தலைவரின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?



A) அசோக் தேவன்

B) பிரசாந்த் குமார்

C) I V சுப்பாராவ் ☑

D) அரவிந்த் கபூர்

- ✓ இந்தியத் துணைக் குடியரசுத்தலைவர் M.வெங்கையாவின் செயலாளராக Dr. I V சுப்பாராவ் IAS (1979: ஆந்திரப்பிரதேசம்), இந்திய அரசின் செயலாளர் தரம் மற்றும் ஊதியத்தில், ஒப்பந்த அடிப்படையில்

அப்பதவியில் தொடர்ந்து நீடிப்பார். அவரது பதவிக்காலம் இந்தியத் துணைக் குடியரசுத்தலைவரின் பதவிக்காலத்துடன் இணைந்திருக்கும்.

**9.** பின்வரும் எந்த மாநிலத்தில், நடப்பாண்டு மேளா கீர் பவானி கொண்டாடப்பட்டது?

A) ஜம்மு மற்றும் காஷ்மீர் ☑

B) உத்தரப்பிரதேசம்

C) மத்தியப்பிரதேசம்

D) மகாராஷ்டிரா



✓ 'மேளா கீர் பவானி' என்பது இடம்பெயர்ந்த காஷ்மீரிய பண்டித சமூகத்தினரின் மிகப்பெரிய மத விழாக்களுள் ஒன்றாகும். இது ஹிந்து மத பெண் கடவுள் ரங்ஞ தேவியுடன் தொடர்புடையது. இது சமீபத்தில், மத்திய காஷ்மீரின் கண்டர்பால் மாவட்டத்தின் துல்முல்லா பகுதியிலும், குப்வாராவிலும் மத உணர்வோடும், களிப்போடும் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் ஆயிரக்கணக்கான பண்டித வழிபாட்டாளர்கள் பங்கேற்றனர்.

✓ பிரார்த்தனை செய்து கடவுளின் அருளைப் பெறுவதற்காக பெருமளவில் காஷ்மீரிய பண்டிதர்கள் வருகைபுரியும் ஜேஷ்டாஷ்டமி (மே-ஜூன்) அன்று இந்த விழா ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. பக்தர்கள் ரோஜா இதழ்களை சுமந்து, வெறுங்காலுடன் நடந்துவந்து பெண் கடவுளுக்கு காணிக்கை செலுத்துகிறார்கள். மேலும், அந்தப் புனித வசந்த காலத்தின்போது பால் மற்றும் கூழ் ஆகியவற்றை வழங்குகிறார்கள். கோவிலுக்குக் கீழே வசந்த காலத்தில் பாயும் நீரூற்றின் நிறமானது அந்தப் பள்ளத்தாக்கின் நல்வாழ்வைக் குறிப்பதாக நம்பப்படுகிறது.

✓ நீரின் நிறம் கருப்பாக இருந்தால் காஷ்மீருக்கு தீங்கு விளைவிக்கும் காலத்தின் அடையாளம் என்று நம்பப்படுகிறது. இருப்பினும், இம்முறை வசந்த காலத்தின்போது, நீர் தூய்மையாகவும் பால் வெள்ளை நிறத்திலும் இருந்தது. அங்குள்ள இசுலாமியர்கள், கோவிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்காக பூக்கள் மற்றும் பிற பிரசாதங்களுக்கு கடைகள் அமைப்பது உட்பட அனைத்து ஏற்பாடுகளையும் செய்வதால் இந்த மேளா மதநல்லிணக்கத்தின் அடையாளமாகவும் மாறியுள்ளது.


**10.** ATM கட்டணங்களை மீளாய்வு செய்யும் RBI குழுவின் தலைவர் யார்?

A) திலிப் அஸ்பே

B) கிரி குமார் நாயர்

C) V G கண்ணன் ☑

D) K ஸ்ரீநிவாஸ்



✓ ATM கட்டணங்கள் முழுவதையும் மீளாய்வு செய்வதற்காக இந்திய வங்கிகள் சங்கத்தின் தலைமை நிர்வாகி V G கண்ணன் தலைமையில் ஆறு உறுப்பினர்கள் கொண்ட ஓர் உயர்நிலைக் குழுவை ரிசர்வ் வங்கி அமைத்துள்ளது. இந்தியாவில் சுமார் 2 இலட்சம் ATMகள் உள்ளன. கடந்த ஏப்ரல் மாத

இறுதியில், 88.47 கோடி பற்று அட்டைகள் மற்றும் 4.8 கோடி கடனட்டைகள் செயல்பாட்டில் இருந்தன. இந்திய ரிசர்வ் வங்கியின் தரவுகளின்படி ஏப்ரலில் மட்டும், 80.9 கோடி பரிவர்த்தனைகள் ATMஇல் பற்று அட்டைகள் மூலம் செய்யப்பட்டுள்ளன.

- ✓ ATM மூலம் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகளுக்கான வங்கிகளின் தற்போதைய செலவீனங்கள், கட்டணங்கள் மற்றும் பரிமாற்றக் கட்டணங்கள் ஆகியவற்றை இக்குழு ஆராயும். இது அட்டைதாரர்க–ளின் ஒட்டுமொத்த ATM பயன்பாட்டு முறைகளை மதிப்பாய்வு செய்யும் மற்றும் வங்கிகள் வசூலிக்கும் கட்டணங்கள் மற்றும் பரிமாற்றக்கட்டணங்கள் மீதான தாக்கத்தையும் (ஏதேனுமிருந்தால்) மதிப்பிடும்.
- ✓ இது உகந்த கட்டணம் அல்லது பரிமாற்றக் கட்டண அமைப்பு மற்றும் முறை குறித்த பரிந்துரைகளை வழங்கும். முதல் கூட்டம் நடைபெற்ற தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் இந்தக்குழு அதன் அறிக்கையை இந்திய ரிசர்வ் வங்கியிடம் சமர்ப்பிக்கும்.

---